**அடக்குமுறையை தோற்கடிப்போம் !**
**மக்கள் ஆணையை வென்றெடுப்போம் !**



# 65வது பேராளர் மாநாடு

2022 செப் 23 காலை 10.00 மணிக்கு
அநுராதபுரம் ம.மகா.வி கேட்போர் கூடம்

- ✶ பேராளர் மாநாட்டின் செயலாளர் அறிக்கை
- ✶ பேராளர் மாநாட்டின் பிரேரணைகள்
- ✶ பேராளர் மாநாட்டின் கோரிக்கைகள்

# இலங்கை ஆசிரியர் சங்கம்

65/4. 'குரு மதுர' சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02.
Tele/Fax: +94 (0) 112 458058 | Email: ceylonteachers@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 65வது பேராளர் மாநாட்டின் செயலாளர் அறிக்கை

இலங்கையில் பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகள் தீவிரமடைந்து, மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் கல்வியிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 65ஆவது பேராளர் மாநாடு அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறுகிறது. 2020, 2021ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று காரணமாக கல்வியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டதுடன், பின்னடைந்த கல்வியைக் கட்டியெழுப்புவதில் எவ்வித அக்கறையும் ஆட்சியாளர்களிடம் காணப்படவில்லை. அதேபோன்று - தற்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடிகளில் பல மாதங்களாக கல்வியை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பாடசாலைகளை மூடி வைத்திருப்பதே ஆட்சியாளர்களின் சகல பிரச்சினைக்கும் தீர்வாக இருந்தது. இப்படியானதொரு சூழலையே இலங்கையின் அரசியல்வாதிகள் மாணவர்களுக்கு ஏற்படுத்தியிருந்தனர்.

இலங்கையின் கடன் தொகை 60 பில்லியன்களாக இருக்கும் நிலையில் அவற்றைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில, கோட்டாபாய இராஜபக்ஸ அரசாங்கம் நாடு வங்குரோத்து நிலையையடைந்துள்ளமையை உத்தியோகபூர்வமாக அறிவித்ததன் மூலம் நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தது. இனவாதத்தினை தமது இருப்பாகக் கொண்ட இராஜபக்ஸ குடும்ப ஆட்சியின் மூலம், இலங்கை மக்களிடையே விரோதத்தை விதைத்திருந்த நிலையில், சந்தர்ப்பவாத ஆட்சியாளர்களால், மக்கள் விளைவுகளை அனுபவிக்கும்போது அதன் உண்மைத்தன்மை தெட்டத்தெளிவாகியது. இராஜபக்ஸ ஆட்சியின்போது கட்டியெழுப்பப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக - மின் கட்டணங்கள் உயர்வு, 7 மணித்தியாலங்களுக்கு மேலாக மின் துண்டிப்பு, டொலர் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள், எரிவாயு இறக்குமதி செய்ய முடியாமல் போனதன் காரணமாக மக்கள் வீதிக்கு வரத் தொடங்கினர். நெருக்கடிகள் தீவிரமடைந்து நாடு முழுவதிலுமான மக்கள் வீதியிலிறங்கி இராஜபக்ஸ ஆட்சியை அகற்ற முன்வந்ததன் காரணமாக, காலிமுகத்திடல் மைதானம் போராட்டத்தின் மையமாக அமைந்தது. மக்களின் ஆக்கிரமிப்பு காரணமாக காலிமுகத்திடல் மைதானம் போராட்ட களமாக மாறியது. ஜனாதிபதி காரியாலய முன்றலானது போராட்டக் களத்தின் மையப்புள்ளியாக மாறியது.

இலங்கை ஆசிரியர் சங்கமானது தமது வரலாற்றுப் பொறுப்பை நிறைவேற்றும் முகமாக அம் மக்கள் எழுச்சியில் தீவிர பங்களிப்பை மேற்கொண்டது. காலிமுகத்திடல் போராட்டக்களத்தை மையமாகக் கொண்டு ஏனைய மாவட்டங்களிலும் பிராந்திய போராட்டக் களங்கள் உருவாகியபோது, இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் தொடர்ச்சியான பங்களிப்பு வழங்கப்பட்டது. நாம் அனைவரும் இப்போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டது ஒரு வரலாற்றுக் கடமையை நிறைவேற்றியதாக அமைந்துள்ளது. இது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாப்பின் 5 ஆம் பந்தியிலுள்ள சங்கத்தின் நோக்கமும் இலக்கும் என்ற 6ஆம் பிரிவுக்கு அமைவாக, பொருளாதார சமூக மற்றும் அரசியலில் ஏற்படும் பொது பிரச்சினைகளில் ஏனைய தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளுடன் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைககளை மேற்கொள்ள வேண்டியது முக்கிய செயற்பாடாகும்.

இராஜபக்ஸ ஆட்சி வழிநடாத்திய இனவாதத்தை முறியடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்ட செயற்பாட்டை நாம் பாராட்ட வேண்டும். எனினும், இப்போராட்டமானது வடக்கு மக்களின் ஆதரவைப் பெறத் தவறியமை பெரும் குறையாகும். வடக்கு மக்கள் தற்போது வரை எழுப்பிவரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை, காணிப்பிரச்சினை, கலாசார ஆக்கிரமிப்பு, மற்றும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வது போன்ற விடயங்களையும் போராட்டத்தின் போது முன்வைக்கப்பட்டிருக்குமேயானால் இது வடக்கு தெற்கு ஒன்றிணைந்த போராட்டமாக இருந்திருக்கும். இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளில் நாம் தலையிட வேண்டியதோடு, இது குறித்து இம்மாநாட்டில் கவனத்தை செலுத்த வேண்டும்.

எரிபொருள் நெருக்கடியின்போது ஏனைய துறைகளைப் போன்று கல்வித் துறையும் பாரிய பின்னடைவைச் சந்தித்தது. தொடர்ந்து பாடசாலைகளை மூடிவைத்திருப்பதை தவிர, வேறெந்த செயற்பாடும் ஆட்சியாளர்களிடம் காணப்படவில்லை. இதன் பிரதிபலனாக 2022ஆம் ஆண்டிற்கான மூன்றாம் தவணை 4 ஏப்ரல் - 2023 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 2023ம் ஆண்டுக்கான கல்வியாண்டில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பரீட்சைகள் தாமதமடைதல், பாடத்திட்டத்தை உரிய காலத்தில் முடிக்கமுடியாமை போன்ற பல சிக்கல் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. எதிர்காலத்தில் இந்நிலைமை தீவிரமடையும் என ஆட்சியாளர்கள் அறிக்கை விடுத்ததன் மூலம் பாடசாலை கல்வித்துறை குறித்து நிச்சயமற்ற சூழல் நிலவுகின்றது. இவை தொடர்பாக ஆட்சியாளர்களுக்கு எவ்வித அக்கறையும் இல்லாத பின்னணியில், இம்மாநாட்டில் கல்வியில் வீழ்ச்சியை தடுப்பது தொடர்பாக, எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பாக நாம் கலந்தாலோசிக்க வேண்டும்.

எரிபொருள் நெருக்கடிக்கு எவ்வித தீர்வும் காணப்படாத நிலையில் அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் போக்குவரத்துக்காக பாரிய கட்டணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. பெரும்பாலானோருக்கு சம்பளத்தில் அரைவாசிக்கும் மேலாக போக்குவரத்துக்கு செலவிட வேண்டியுள்ளது. சம்பள உயர்வு ~~பற்றிய எவ்வித விவாதமும் இல்லாத பின்னணியில் ஒட்டுமொத்த வாழ்க்கைச் செலவும்~~ 300 வீதத்தால் அதிகரித்திருப்பதோடு சம்பளம் அடிமட்ட நிலையில் காணப்படுகின்றது இவ்வாறான சூழலில் ஆசிரிய, அதிபர்களின் சம்பள முரண்பாட்டை முழுமையாகத் தீர்த்து எமது எஞ்சிய சம்பள உயர்வை வென்றெடுப்பதற்கான கவனத்தை செலுத்த வேண்டும். தண்ணீர்க் கட்டணம் உட்பட பாடசாலையின் அனைத்து செலவினங்களையும் பாடசாலைகளிடையே திணித்திருப்பதன் மூலம் பாடசாலைக் கட்டிடங்கள் கட்டுவதை நிறுத்தி சகல செலவிடும் பொறுப்புக்களிலிருந்து அரசாங்கம் விலகி, பெற்றோர்களின் பொறுப்பில் விட்டிருப்பதானது, அவர்கள் தற்போது முகம் கொடுத்துள்ள சிக்கலுக்கு மேலதிகமானதொரு சுமையைக் கூட்டுவதாகும்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த யுனிசெப்பின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் திரு ஜோரிஸ் லார்யேயா அஜெய் அவர்கள் கருத்திட்டிருப்பது, இலங்கையிலே -அடுத்த நாள் சாப்பாடு கிடைக்குமோ என்ற நிச்சயமற்ற சூழலிலேயே, இரவிலும் பிள்ளைகள் சாப்பிடாமல் உறங்கச் செல்கின்றனர். இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போசாக்கின்மை தெற்காசியாவில் 2ஆம் இடத்தைப் பிடித்துள்ளதுடன் உலகளாவிய ரீதியில் 6ஆம் இடத்தைப் பிடித்துள்ளதென அவர் மேலும் கருத்திட்டுள்ளார். அவரது கருத்துக்கு அரசாங்கம் முற்றிலும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ள போதும், அதன் உண்மைத் தன்மையை ஆசிரியர் அதிபர்களான நாம் நன்கு அறிவோம்.

இலங்கையின் போசாக்குக் குறைபாடு குறித்து அண்மையில் ....ந் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தின்போது- ஆளும் கட்சியினர் மற்றும் எதிர்க்கட்சியினர் பங்கேற்காமை காரணமாக - இவ்விடயங்கள் குறித்து பயனுள்ள தீர்வொன்றைப் பெறாததன் காரணமாக, பாராளுமன்றம் ஒரு பயனற்ற தாபனமாக மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் சிறுவர்கள் தொடர்பாக ஆட்சியாளர்களுக்கு எவ்வித தூரநோக்குப் பார்வையும் இல்லை என்பது தெட்டத் தெளிவாகின்றது. இந்நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்பதன் அடிப்படையில், பிள்ளைகளின் போசாக்குத் தொடர்பாக நாம் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும்.

நடைபெற்று வந்த போராட்டத்தின்போது பல லட்சக்கணக்கான மக்கள் தொடர்ந்து பங்களிப்பு செய்ததன் மூலம் ஜனாதிபதி கோட்டாபாய இராஜபக்ஸ 2022 ஜூலை 09ஆந் திகதி நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது. அது போராட்டத்தின் மூலம் மக்கள் பெற்ற வெற்றியாகும். இது அமைதி வழிப் போராட்டம் என்ற காரணத்தால் கோட்டாபாய நாட்டை விட்டு வெளியேறியதன் பின், எதிர்கால விவகாரங்கள் அரசியலமைப்பு ரீதியாக செயற்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனபடி இடைக்கால ஜனாதிபதி ஒருவரைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் இறையாண்மையாலும் ஜனநாயக ரீதியிலும் நியமிக்கப்பட்டமை, 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடாத்திய தேர்தல் மூலமேயாகும். போராட்டத்தின் போது எழுந்த எழுச்சியானது தற்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிரானதாகும். அதன்படி தற்போதைய பாராளுமன்றமானது மக்களது இறையாண்மையைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. எனினும் அரசியலமைப்புக்கு அமைய இடைக்கால ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு அரசியலமைப்பில் உள்ள அதிகாரம் தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடையாது. மக்களின் இறையாண்மைப்படி செயற்படுவார்கள் என எதிர்பாத்திருந்தபோதும், மக்களின் விருப்பத்துக்கு முரணாகவே நடைபெற்றிருக்கிறது.

ராஜபக்ஸ குழுவினர் தமக்குத் தேவையானபடி சதிச் செயல்களின் மூலம் ஒரேயொரு ஆசனத்தை மட்டும் வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்ஹவை, 134 வாக்குகள் வழங்கியதன் மூலம் ஜனாதிபதியாக நியமித்தனர். அதன் பின்னர், அவர்களது சகல சதித் திட்டச் செயற்பாடுகளும் வெளியானது. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்ஹ பதவியேற்றதன் பின் மக்கள்மீது கடுமையான அடக்குமுறைகள் கட்டவிழ்க்கப்பட்டது. ஜூலை 21 ஜனாதிபதி பதவியேற்றதன் பின் ஜூலை 22ஆம் திகதி காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தின்மீது மோசமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதுவரையில் போராட்டத்தில் ஈடுபட்ட 3000இற்கும் அதிகமானோரைப் பல்வேறு குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்து, 1500இற்கும் மேற்பட்டோரை அவர்களது பட்டியலுக்கமைய சிறையில் அடைத்தும் உள்ளனர். அடக்குமுறை இன்றும் முடியவில்லை. ஒவ்வொரு நாளும் கைதுகள் இடம்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடக்குமுறைக்காக இ.ஆ.சங்கத்தையும் பலியாக்கும் அரசாங்கத்தின் முயற்சியானது அதிபர் ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களினாலும் மற்றும் சர்வதேச அழுத்தங்களின் காரணமாகவும் ஓரளவு பின்வாங்கப்பட்ட போதிலும், இ.ஆ.ச. தலைவரான தோழர் பிரியந்த பர்ணாந்துவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள போலிக் குற்றச்சாட்டுத் தொடர்பில் 2204/22 இலக்கங்கொண்ட 'பி' அறிக்கையின் மூலம் அநுராதபுர நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அதேபோன்று மக்கள் போராட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பில் குற்றச்சாட்டின் பெயரில் இ.ஆ.சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அவர்களைப் பல வழக்குகளுக்கு உட்படுத்தியுள்ளனர். 2022.05.28 அன்று காலிமுகத்திடல் போராட்டத்தின் 50 நாள் நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின்போது, நீதிமன்ற உத்தரவை மீறியதான குற்றச்சாட்டின் பெயரில் 2022 ஆகஸ்ட் 3ஆம் திகதி இ.ஆ.ச. காரியாலயத்தில் வைத்து கைது செய்து - அடுத்தநாள் மாலைவரை கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு - இரவு 7.00 மணியளவில் கோட்டை நீதிவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு ஆஜர்படுத்தப்பட்டு - 2022.08.12 வரை சிறையில் அடைக்கப்பட்டார். பிறகு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை மூலம் 2022.08.08 அன்று ஐந்து லட்சம் பெறுமதியான 2 சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். இச் செயற்பாட்டில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி M.A. சுமந்திரன் உட்பட 100 இற்கும் அதிகமான சட்டத்தரணிகளின் பங்களிப்பை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். 22236/22 என்ற இலக்கத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு வரும் வேளையில் ஜூலை 13 ம் திகதி ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் நடாத்திய கூட்டத்தில் உரையாற்றிய குற்றத்தின் பெயரில் 22517/22 இலக்கம் கொண்ட வழக்கிலும் பிணையில் பிணை வழங்கப்பட்டது.

அரசாங்கம் அடக்குமுறையைத் தீவிரப்படுத்தி தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. இப்போராட்டத்தில் பெரும்பங்காற்றிய அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் வசந்த முதலிகே, அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகளின் அமைப்பாளர் கல்வெவ சிறிதம்ம தேரர், களனி பல்கலைக்கழக செயற்பாட்டாளர் ஜீவந்த குணதிலக ஆகியோர் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 2021 மே மாதம் இறந்தோரை நினைவுகூர்ந்து விளக்கேற்றிய குற்றச்சாட்டில் கல்குடா பிரதேசத்தில் 10 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களை 7 மாதத்திற்கு மேலாக சிறையிலடைத்த பின்னர் விடுதலை செய்தாலும், 2022 ஏப்ரல் 25ஆம் திகதியே சகல குற்றச்சாட்டுககளிலிருந்தும் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். கவிஞராகிய அனாஸ் ஜாஸிம்க்கு 579 நாட்களுக்குப் பின் பிணை வழங்கப்பட்டாலும் கடந்த ஆகஸ்ட் மாதம் வர்த்தமாணியில் அறிவிக்கப்பட்ட பயங்கரவாதிகளின் பெயர்ப்பட்டியலில் அவரது பெயரும் உள்வாங்கப்பட்டிருந்தது. நீதிமன்ற மூலம் தீர்ப்பளித்திருந்த போதும் அவர் வர்த்தமாணியில் அறிவிக்கப்பட்ட பயங்கரவாதியாவார். 2019 ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பாக வெவ்வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளபோதும், குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று விசாரணை அறிக்கைகள் இதுவரையும் வெளியிடப்படாதது கவலைக்குரிய செயற்பாடாகும். அவர்களது விடுதலைக்கான போராட்டத்தை நாம் நிபந்தனையின்றி ஆதரிக்க வேண்டும்.

1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடுப்பு சட்டமானது தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. ஏராளமான மக்கள் சிறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கப்பட்டனர். சமீபகால எழுச்சியிலும் வன்முறைகள் எதுவும் பயன்படுத்தாத போதிலும் பயங்காரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மாணவர் தலைவர்களைக் கைது செய்திருப்பது அடக்குமுறையின் மிருகத்தனத்தை எடுத்துக் காட்டுகிறது. மக்கள் விரோத - மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக செயற்படும் தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கையை நிறுத்துவதற்கான - எங்களது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் - எமது 65ஆவது பேராளர் மாநாட்டின் பிரதான கருப்பொருளானது, 'அடக்குமுறையை தோல்வியடையச் செய்வோம்! மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்போம்! என்பதாகும். இது தொடர்பாக விரிவாக விவாதித்து, பயங்கரவாத தடைச்சட்டத்தை தோற்கடிக்கும் அனைத்துப் போராட்டங்களுக்கும் நிபந்தனையின்றி ஆதரவளிக்க வேண்டும்.

கடந்த வருடம் முழுவதும் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் போது இலங்கை ஆசிரியர் சங்கம் ஒரு மையக்காரணியாக மாறி பலமான ஐக்கியத்தை உருவாக்கியது. ஏனைய தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள் என்பவற்றுடன் இணைந்து வெகுஜன அமைப்பு ஒன்றியத்தை உருவாக்கியதன் மூலமே. தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகள் ஒன்றாக இணைந்து பல செயற்பாடுகளில் ஈடுபட்டு, தொடர்ச்சியான தலையீடுகளை மேற்கொள்ள முடிந்தது. அத்தோடு ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கக் கூட்டணியை வலுப்படுத்தி, போராட்டத்தின்போது கல்வித்துறையில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளில் தலையிட்டோம். மக்கள் போராட்டம் வலுப்பெற்றமைக்கு இத்தலையீடுகள் மூலம் இடம்பெற்ற வேலை நிறுத்தங்களே காரணமாகும். அதிபர், ஆசிரிய ஒன்றியத்தின் மூலம் கோட்டாபாய இராஜபக்ஸவின் ஆட்சிக்கு எதிராக முதல் தொழில்சங்க நடவடிக்கை, 2022 ஏப்ரல் 25 அன்று சுகயீன விடுப்பு அறிவித்தல் நடவடிக்கையாகும். இது மிகவும் வலுவான நடவடிக்கையாகும். மேலும் 28.04.2022 அன்று நடைபெறவிருந்த ஒட்டுமொத்த பொது வேலை நிறுத்தத்திற்கு இது பாரிய ஊக்கமாக அமைந்திருந்தது. இலங்கையின் அனைத்துத் துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஆட்சியாளர்களுக்கு எதிராக ஏப்ரல் 28ஆம் திகதி இடம்பெற்ற பொது வேலை நிறுத்தம் மாபெரும் வெற்றியடைந்தது. 1952ஆம் ஆண்டு நடைபெற்ற ஹர்த்தாலுடன் ஒப்பிடும்போது மே 6ஆம் திகதி இடம்பெற்ற ஹர்த்தால் இலங்கை வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மக்களின் போராட்டம் வலுப்பெற்றதால் மே 9ஆம் திகதி பிரதமரும் அமைச்சரவையும் பதவி விலக நேரிட்டது. அன்றைய தினம் அரசாங்கத்தினால் போராட்டக்காரர்களுக்கு எதிராகத் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையாளர்கள், இதுவரையும் கைது செய்யப்படாத போதிலும் போராட்டக்காரர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையின் கல்விமுறைமைக்கு அப்பாற் சென்று - மக்களது வாழும் உரிமை, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைக்கான போராட்டம் மேலெழுந்ததன் காரணமாக ஒட்டுமொத்த நடவடிக்கையும் போராட்டத்தின் மையமாகக் கொண்டிருந்தது. நாட்டின் ஜனநாயகம், மனித உரிமைகளைப் பாதுகாப்பது, அரசியலமைப்பின் மூலம் சர்வதிகாரத்தை முறியடிப்பது, சம்பளத்தை உயர்த்துவது, மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பது ஆகியன கருப்பொருளாகக் கொள்ளப்பட்டுள்ளது. அடக்குமுறையை முறியடித்து மக்கள் அபிலாசைகளை வென்றெடுப்போம் என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு 65ஆவது பேராளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாட்டின் நோக்கினைத் தயாரிக்க வேண்டும்.

நாட்டின் நிலைமைக்குப் பரிகாரமாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ரூ.2.8 பில்லியன் கடனாய்ப் பெற எதிர்பார்த்து நாட்டின் வளங்களை விற்பனை செய்தல், கல்வி மற்றும் சுகாதாரத்தை தனியார்மயப்படுத்துதல், அரச ஊழியர்களைக் குறைத்தல் போன்ற பல்வேறு தவறான உத்தரவுகள் கடன் நிபந்தனையாக வெளிவந்துள்ளன. அதன் காரணமாகவே இலவசக்கல்வி கடும் ஆபத்தில் உள்ளது. கல்வித் துறையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாம் வலுவான வாதத்தை முன்னெடுக்க வேண்டும். ஆட்சியாளர்களின் தவறான பொருளாதாரக் கொள்கைக்குப் பதிலாக வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முகமாக நாட்டினை அடமானம் வைப்பதைத் தோற்கடிக்க வேண்டும். IMF (சர்வதேச நாணய நிதியத்தின்) நிபந்தனைகளுக்கு எதிராக தற்போது முன்வந்துள்ள போராட்டத்துடன் நாம் ஒன்றிணைய வேண்டும்.

இலங்கையின் கல்வி வீழ்ச்சியானது டலஸ் அழகப்பெரும, ஜீ.எல்.பீரிஸ், தினேஸ் குணவர்த்தன, சுசில் பிரேம ஜயந்த ஆகிய நான்கு கல்வி அமைச்சர்களும் மற்றும் அண்மையில் மூன்று இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டபோதும் தொடர்ந்து இடம்பெற்றே வந்தது. அரசியல் நலன்களுக்காக பதவிகளை வழங்கும் நிலையில் கல்வித்துறை உள்ளதாகவே இந்த நியமனங்கள் மூலம் தெரியவருகிறது. இலங்கையின் கல்வியில் தீவிர சீர்திருத்தம் தேவைப்பட்டபோதும் அதற்குத் தேவையான தலையீடுகளுக்கு மாறாக கடந்த காலங்களில் அலங்கார காட்சிப்பொருளாக சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சையை மையாகக் கொண்ட போட்டிக் கல்விக்குப் பதிலாக திறன் சார்ந்த கல்வியை யதார்த்தமாக்குவது அவசியமாகும். கலாநிதி உபாலி சேராவின் தலைமையில் அரசாங்கம் ஒரு விரிவான சீர்திருத்த செயல்முறையை முன்மொழிந்தது. அம் முன்மொழிவைக் கேள்விக்குள்ளாக்கியதுடன் அவரை இணைத்துக்கொண்டு இ.ஆ.சங்கமானது கொழும்பு நூலகத்தில் பொதுமக்களின் பங்களிப்புடன் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்தது. அந்தப் பிரேரணைகளின் பயனற்ற தன்மையும் கேள்விக்குறியாகி, தற்போது அந்த முன்மொழிவுகளைக் கொண்டுவந்த கலாதி உபாலி சேராவும் தொலைந்துபோயுள்ளார்.

மீண்டும் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் பலவற்றைக் கொண்டுவருவதாக கல்வி அமைச்சுக் கூறியபோதும் அது இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. எல்லா அரசாங்கமும் கல்வியை சீர்திருத்தப் போவதாகக் கூறினாலும், பழைய முறையை முன்னெடுத்துச் செல்வதாகவே நடைபெற்றுவருகிறது. எனவே, இந்நிலையில் கல்விச் சீர்திருத்த செயல்முறைக்குத் தெளிவான தலையீடு செய்வது எமது பொறுப்பாகும். அதற்கான முன் முயற்சியை எடுக்க வேண்டிய பொறுப்பு எம்மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சேவைக்கும் இலங்கை அதிபர் சேவையில் உள்ள பிரச்சினைகளுக்கும் முறையான தீர்வு ஒன்று இதுவரை கிடைக்கவில்லை. ஆசிரியர் சேவையின் தரமுயர்வுக்கான செயற்திறன் தடைகளாக மொடியூல்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் எவ்வித முறையான திட்டமேதும் இல்லாதது சம்பள உயர்வைப் பெறுவதில் பல்வேறு தடைகளை உருவாக்குதல், மாகாணங்களுக்கிடையில் வெவ்வேறு முறைகளை அமுல்படுத்துதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகப்பூர்வ மொழிகளின் புலமை தொடர்பான பாடநெறிகளை நடத்தாமை, 2009ஆம் ஆண்டு அதிபர் சேவை மூன்றாம் வகுப்பு நியமனம் வழங்காமை, புதிய சுற்றறிக்கை நிபந்தனைகளிலிருந்து விலக்கு அளிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதிபர்களுக்கான திறன் விருத்தி மேம்பாட்டு பயிற்சி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டினைத் தீர்க்கும் போராட்டத்தின்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்குத் தீர்வாக வெளியிடப்பட்ட 2021.08.10ஆம் திகதிய 21/1415/3002/023 கொண்ட அமைச்சரவைப் பத்திரம் மூலம் சம்பள முரண்பாட்டுக்கு மேலதிகமாகக் காணப்பட்ட பிரச்சினையான - ஆசிரியர் சேவையிலிருந்து அதிபர் சேவைக்கு நியமனம் வழங்கும் போது சம்பளம் குறைவடைதல், அரச சேவையின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் கொடுப்பனவுகள் அதிபர் சேவைக்கு வழங்கப்படாமை, ஆசிரிய சேவையிலிருந்து அதிபர் சேவைக்கான தரமுயர்வின்போது காணப்படும் சம்பள உயர்வுத் தொகையில் காணப்படும் முரண்பாடு உள்ளிட்ட - ஆசிரிய, அதிபர்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கும் முகமாகக் குழுவொன்றை நியமித்து, 6 மாதத்திற்குள் தீர்வினை வழங்கும்படி அப்பத்திரத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. அது தொடர்பாக தற்போதைய கல்வி அமைச்சருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின்போது திட்டமொன்றைத் தயாரிப்பதாகக் கூறியபோதும் இதுவரையும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அது வாக்குறுதியாக மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலையில் நிறைவேற்றுவதற்கான திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும்.

1999ஆம் ஆண்டு முன்னுரிமை திட்டத்தில் பட்டதாரிகள் நியமனம் வழங்குதலின்போது ஆசிரிய சேவைக்கு முன்னராக வேறு சேவைகளில் இருந்தவர்களது சேவைக் காலத்தை ஆசிரிய சேவையுடன் இணைத்துக் கொள்வதற்கான பிரச்சினை இதுவரையும் வென்றெடுக்கப்படவில்லை. அதற்கான காரணம் நிரந்தர அமைச்சரொருவர் இல்லாமையேயாகும்.

மத்திய மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர்கள் தொடர்பாக மேற்கொண்ட நீண்ட போராட்டத்தின் பயனாக எமக்கு இவ்வருடத்திலேயே வெற்றிகொள்ள முடிந்தது. இந்தப் போராட்டத்திற்கு செந்தில் சிவஞானம், ரேணுகா மலியகொட உட்பட ஏனைய சகோதர சகோதரிகளின் அர்ப்பணிப்பைப் பாராட்ட வேண்டும்.

தற்போது அரச சேவைக்கான ஆட்சேர்ப்பை இடைநிறுத்துவதற்கான தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளது. இந்த நிலையில் 30,000இற்கும் மேலான பாட ஆசிரியர்கள் பற்றாக்குறைக்கான தீர்வு என்ன? கடந்த காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 51,000இற்கும் அதிகமான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானமானது ஆசிரிய சேவைப் பிரமாணங்களை மீறாத வகையில் செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இ.ஆ.ச. உறுதியாகவுள்ளது.

2020 2021ஆம் ஆண்டுகளில் கொரோனா தொற்றுநோய் சூழ்நிலையின் போது ஆசிரியர் இடமாற்ற செயற்பாடுகள் சுமார் 3 வருட காலமாக நிறுத்தப்பட்டது. இடமாற்றத்தை எதிர்பார்த்திருந்த ஆசிரியர்கள் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகினர். தற்போது தேசிய பாடசாலைகளில் 9000இற்கும் மேற்பட்டோர் இடமாற்றத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் இடமாற்றச் செயற்பாடுகள் வெளிப்படையானதாக அமைய வேண்டும். தேசிய பாடசாலைகளின் இடமாற்றத்தின்போது இடமாற்றச் சபைகளின் செயற்பாடுகளும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இதற்கான காரணம் இடமாற்றச் சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சில தொழிற்சங்கங்களின் நெறிமுறையற்ற நடவடிக்கைகள் இடமாற்றச் சபை செயற்பாட்டில் பாரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இந்நிலையை முறியடித்து நாம் தேசிய இடமாற்றச் கொள்கை சபையொன்றை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரச ஊழிய ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியத்தை ஒத்திவைத்தல், பணிக்கொடை வழங்காதது கடுமையான பிரச்சினையாக உள்ளது. இதுவரையும் 20,000இற்கும் மேற்பட்டோருக்கு பணிக்கொடை வழங்கப்படவில்லை. அரசாங்கத்தின் புதிய தீர்மானங்களுக்கமைய 2022.12.31ஆம் திகதியாகும்போது மேலும் பாரிய தொகையினர், இவர்களோடு இணையப் போகின்றனர். ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பாக ஒரு குறிப்பிட்ட திட்டத்தை உருவாக்குவதற்கு நாம் முன் நிற்க வேண்டும். 2016இற்குப் பின்னர் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படாத நிலையில், ஆசிரிய சேவையில் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும்போது 2022.01.01இற்கு முன்னர் ஓய்வு பெற்றோர் தொடர்பான கோரிக்கையை நிராகரிக்க முடியாது.

2022ஆம் ஆண்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சை கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவானது நியமிக்கப்பட்ட தொகையைவிட குறைவான தொகையை வழங்கியது. பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டோருக்கான கொடுப்பனவுகளை வழங்காமை தொடர்ந்து வருகின்றது. அண்மைக் காலத்தில் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடைந்ததன் காரணமாக. ஆசிரியர் அனுதாபத்தோடு பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டபோதிலும் கொடுப்பனவுகள் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்படுவதற்கு எதிராக தெளிவான முடிவொன்றை எடுக்க வேண்டியதோடு, எதிர்காலத்தில் இதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டியுள்ளது.

தொடர்ச்சியாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததன் காரணத்தால் பிள்ளைகள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். பாடசாலைகளில் பரீட்சைப் போட்டிகள், இணைய விளையாட்டுக்குப் பதிலாக தொடர்ச்சியான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தியதன் மூலம் இந்நிலைமை மேலும் உக்கிரமடைந்துள்ளது. மாணவர்களிடையே ஒழுக்கமின்மை, போதைப்பொருள் பழக்கத்தில் படிப்படியான அதிகரிப்பு என்பவற்றைக் காணலாம். இதற்கான தீர்வாகப் மாணவர்களின் புத்தகப் பையைப் பரிசோதிக்கும்படியே பாராளுமன்றத்தில் அமைச்சர் அறிவித்துள்ளார். இவ்வாறான எளிமையான முடிவுகளால் அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. மாணவர்கள்மீது திணிக்கப்படும் பாடத்திட்டத்தின் சுமையைக் குறைத்து, கல்விச் செயற்பாட்டில் நெகிழ்வை ஏற்படுத்தி பின்தங்கிய கல்விமுறைக்குப் பதிலாக முன்னணிக் கல்வி செயற்பாடுகளே வழிநடத்தப் படுபட வேண்டும்.

கல்வித்துறையில் பெரும்பான்மை உறுப்பினர்கள் அங்கத்தவர்களாகக் கொண்ட சிக்கன மற்றும் கடன் கூட்டுறவுச் சங்கம் (EDCS) ஊழல் மோசடியாளர்களின் கூடாரமாக மாறியுள்ளது. அரசியல் கட்சிகளை மையப்படுத்தி இங்கு அதிகாரங்களைக் கைப்பற்றிய அனைத்து நிர்வாகிகளும் தமது அரசியல் இலக்குகளையும் கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்குகளையும் அடைவதற்காகவும் கட்டுப்பாட்டில் அடங்காத வகையில் பல கிளை நிறுவனங்களை அமைப்பதனூடாக தேவையற்ற செலவினை சங்கத்திற்குத் திணித்து, அது ஒரு தொழில் வழங்கும் இடமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கடன் வழங்குவதற்குப் பதிலாக அரசியல் இலக்குகளை அடைவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, கல்வி கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் உண்மையான அங்கத்தவர்களின் நிர்வாகத்திற்குக் கீழ் கொண்டுவரவேண்டியதோடு, கூட்டுறவில் கட்சி அரசியலை நுழைக்கும் செயற்பாட்டை முறியடிக்க வேண்டும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக கடன் பெறுவது அதிகரித்துச் செல்கின்றது. மேலும், வங்கி வட்டி வீதங்களின் பாரிய அதிகரிப்பால் பல்வேறு வங்கிகளில் கடன் பெற்ற ஆசிரியர் மற்றும் அதிபர்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்த வட்டி வீத உயர்வை நாம் எதிர்க்க வேண்டும். இந்த நெருக்கடியான நிலையில் சம்பளம் அதிகரிக்காது, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் ஏற்பட்டிருக்கும் அநீதிக்கு எதிராக சகலருக்கும் சம்பளம் அதிகரிக்கக்கூடியவகையில் ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க ஒன்றியம் போராட்டமொன்றை மேற்கொள்ள வேண்டும்.

பெருந்தோட்டப்புற மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தோட்ட அரசியல்வாதிகள் மக்களின் பிரச்சினைகளை அரசியல் சூதாட்டத்திற்குப் பயன்படுத்தி வருகின்றனர். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வேலைத்திட்டம் எதுவும் அவர்களிடம் இல்லை. தோட்ட உரிமையாளர்கள் இவ்வருடத்தில் பில்லியன் கணக்காக இலாபமடைவது ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்காமையினாலேயாகும். இப்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு முன்னர், தோட்டத் தொழிலாளர்கள் ரூ. 1000 சம்பளம் அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கை முன்வைத்திருந்தனர். அந்தக் கோரிக்கை கூட நிறைவேற்றப்படாமல், தோட்ட உரிமையாளர்கள் இலாபம் ஈட்டும்போது அரசு மௌனம் காக்கின்றது. இலங்கை நலன்புரி அரசாக உருவாகுவதில் 200 வருடங்களுக்கு மேலாக உழைப்பை விதைத்த இந் தொழிலாளர்களை இன்னும் அடிப்படை வசதிகளின்றி வைத்திருத்தல் கவலைக்குரிய விடயமாகும்.

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் மீனவர்கள் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். கோட்டாபாய இராஜபக்ஸ ஆட்சியில் கொண்டுவரப்பட்ட தன்னிச்சையான விவசாயக் கொள்கையினால் விவசாயமும் வீழ்ச்சியடைந்தது. விவசாயிகள் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். விவசாயம் தொடர்பாக தாம் எடுத்த தீர்மானம் தவறானது என கோட்டாபாய இராஜபக்ஸ ஒப்புக்கொள்ளும்போது விவசாயம் முற்றாக வீழ்ச்சியடைந்திருந்தது. மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுவிட்டிருந்தது. ரணில் - இராஜபக்ஸ நிர்வாகத்தில் இப்பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வும் இல்லை. எனவே, அம்மக்களின் பிரச்சினைகளுக்குத் தலையிட வேண்டியது எமது கடமையாகும். இந்த மாநாட்டில் அது தொடர்பாகவும் கவனமெடுக்க வேண்டும்.

மக்கள் எதிர்நோக்கும் அழுத்தங்கள் தொடர்பில் ரணில் - இராஜபக்ஸ அரசாங்கம் எந்தப் பொறுப்பிற்கும் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த அரசானது தமது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக ஏற்படுத்திக்கொண்ட குழுக்களேயாகும். பாண் விலையைத் தீர்மானிப்பது பேக்கரி உரிமையாளர்களும், பஸ் கட்டணங்களைத் தீர்மானிப்பது பஸ் உரிமையாளர்களுமேயாகும். பொருட்கள் உற்பத்தியில் விலை தீர்மானிப்பது அந்தந்த உரிமையாளர்களிடம் ஒப்படைத்திருப்பதன் மூலம் தற்போது காணப்படுவது அரசாங்கம் இல்லாத தன்மையேயாகும். இன்று கல்விச் செயற்பாடுகள் நடைபெறுவது ஆசிரிய, அதிபர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களின் பங்களிப்பின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகிறதே தவிர, கல்விச் செயற்பாடுகளில் அரசாங்கத்தின் தலையீடு எதுவும் இல்லை. பாடசாலைகளில் பாடத்திட்டத்தை அமுல்படுத்துவது உட்பட சகல விடயங்களும் பாடசாலைகளுக்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் கல்வி அல்லது ஆசிரியர் திறனை விருத்தி செய்துகொள்ளல் போன்ற அறிவை விருத்தி செய்துகொள்ள வேண்டியதும் எம்மீதே சுமத்தப்பட்டுள்ளது. அதிபர்கள் அவர்களது சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக பாடசாலைகளை நடாத்துவதற்குப் பணத்தைத் தேட வேண்டியுள்ளது.

2022ஆம் ஆண்டிற்கான பாடசாலைச் சீருடைகள், பாடப் புத்தகங்கள் வழங்கும் பணி நிறைவு பெறவில்லை. 2023ஆம் ஆண்டிற்கான சீருடைகள், பாடப் புத்தகங்கள் அச்சிடுதல் என்பன இன்னும் இடையில் நிற்கின்றது. சீனாவில் இருந்து சீருடைத் துணி கிடைக்குமென்றும் பாட நூல்கள் அச்சிடுவதற்கு இந்தியக் கடன் உதவித் திட்டத்தில் இருந்து தாள்கள் கிடைக்குமென்று கல்வி அமைச்சர் அறிவித்திருப்பதன் மூலம் தெரிய வருவதாவது - இலவசக் கல்வியை அவர்களால் நிலைநாட்ட முடியாது என்பதாகும். ஆசிரிய, அதிபர்கள் என்ற வகையில் பாரிய சமூகப் பொறுப்பு எம்மிடம் சுமத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அடக்குமுறை, பொருளாதார அழுத்தம், அரசியல் ஸ்தீரமின்மை போன்றவற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்க சூட்சுமமான தலைமைத்துவ முறையைக் கையாள வேண்டும். தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியங்களை மேலும் விரிவுபடுத்த வேண்டும். அத்தோடு ஆசிரிய, அதிபர் கூட்டணி மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். கல்வித்துறை உட்பட ஏனைய சகல உழைக்கும் வர்க்கத்தினரையும் இணைத்துக்கொண்டு இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக மக்கள் சக்தியொன்றைக் கட்டியெழுப்புவது எமது பொறுப்பாகும்.

மக்கள் போராட்டத்தின் மூலம் மக்கள் எதிர்பார்க்கும் சமூக மாற்றம் அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் செய்யப்பட வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் மூலம் நாடு அதாளபாதாளத்தில் தள்ளப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. நிறைவேற்று ஜனாதிபதி முறையினை இல்லாதொழித்து, சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இதன்போது தியவன்ன ஓயாவைத் தாண்டிய ஒரு சக்தி உருவாக்கப்பட வேண்டும் என்பது போராட்டத்தின் மூலம் தோன்றியதொரு கருத்தாகும். அதற்காக மக்கள் பேரவை ஒன்றை உருவாக்குவது குறித்து யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மக்கள் மன்றத்தினூடாக மக்கள் சக்தியொன்றை உருவாக்கி வினைத்திறனான செயற்பாட்டைக் கட்டியெழுப்பும் புதிய கருத்தாக்கத்தைப் பற்றி நாம் கலந்துரையாட வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் தோன்றவிருக்கும் சமூக எழுச்சியில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளையும் கவனத்தில் எடுத்து சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக ஒவ்வொரு இனத்தவரதும் தனித்துவமான கோரிக்கைகளை சேர்த்துக்கொண்டு நாம் மக்களுடன் முன்வர வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றோம்.

இலங்கை ஆசிரியர் வாழ்க !

மத்திய குழுவின் கட்டளைகளுக்கு அமைய
ஜோசப் ஸ்ராலின்
பொதுச் செயலாளர்
2022.09.23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின 65வது மாநாட்டின் யோசனைகள்

• அதிபர் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களின் சம்பளப் போராட்டத்தில் 97 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையில் இருந்த சம்பள முரண்பாட்டினை நீக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்த போதும் எமது போராட்டத்தின் விளைவாகவே அதில் மூன்றில் ஒரு பங்கினை பெறக்கூடியதாக இருந்தது முழுமையான சம்பள முரண்பாடு தீர்க்கும் வரை எமது போராட்டம் தொடரும் எனவும் எதிர்காலத்தில் எமது போராட்டத்திற்கான வியூகங்களை வகுக்கவும் அதிபர் ஆசிரியர்கள் ஆசிரிய ஆலோசகர்களை தயார்படுத்துவதற்கான வேலை திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

• கல்விக்காக மொத்த தேசிய உற்பத்தியில் 6மு ஒதுக்க வேண்டும் என்பதனை ஏற்றுக் கொண்ட பின்னணியில் தொடர்ச்சியாக அத்தொகையினை குறைக்கும் செயற்பாடானது இலவச கல்வியை தனியார் மயப்படுத்துவதற்கான சூழ்ச்சிகரமான செயற்பாட்டில் அரசு பயணித்துக் கொண்டிருக்கிறது என்பது கண்கூடு. தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினை சமாளிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவதற்காக அரச சொத்துகளை விற்பனை செய்தல், அரசு ஊழியர்களை ஆட்குறைப்பு செய்தல், கல்வி மற்றும் சுகாதாரத்தை தனியார் மயப்படுத்துவதன் ஊடாக இலவச கல்வியையும் இலவச சுகாதாரத்தையும் இல்லாதொழிக்க தயாராகின்றார்கள். மக்கள் ஆணை இல்லாத அரசுக்கு இவ்வாறான முடிவுகளை எடுக்க அதிகாரம் இல்லை மக்கள் அபிலாசைகளுக்கு எதிரான இது போன்ற முடிவுகளுக்கு எதிராக வேலை செய்யும் மக்களும் மாணவர் ஒன்றியங்களும் சகல தொழிற்சங்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் அணி திரள வேண்டும் என யோசனைகளை முன்வைக்கின்றோம்.

• அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டினை தீர்ப்பதற்கான நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவினால் முன்வைக்கப்பட்ட யோசனையின் படி அதிபர்களின் சம்பள முரண்பாட்டிற்கு மேலதிகமாக பதவி உயர்வு பெறுகின்ற போதிலும் சம்பள குறைவு ,தீர்வை அற்ற வாகன அனுமதி பத்திரத்தினை பெற்றுக்கொள்ளல் தொடர்பான சிக்கல்கள், நிலுவை பணத்தைப் பெற்றுக் கொள்ளல் , நிர்வாக ரீதியான இடையூறுகள், தொடர்பான தீர்வினை பெற்றுக் கொள்வதற்காகவும் ஆசிரியர் சேவையில் சம்பள முரண்பாடுகளுக்கும் மேலதிகமாக அமைச்சரவை உப குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள அதிபர் ஆசிரியர்களின் ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக் கொள்வதற்காகவும் உடனடியாக அமைச்சரவை குழு கூட்டப்பட்டு அவர்கள் ஊடாக ஆறு மாதத்திற்குள் தீர்வினை பெற்று தருவதாக கூறப்பட்ட போதிலும் இன்றுவரை எவ்வித முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் அதற்காக எமது அழுத்தங்களை பிரயோகிக்க கூடிய வகையிலான வியூகங்களை முன்னெடுப்பதாக முன்மொழியப்பட்டது.

• 2016 முதல் 2020 ஆண்டு வரை ஓய்வுபெற்ற ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய பிரதான பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளத்தை நிறுத்துமாறு கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் வற்புறுத்தியதுடன். தற்போது ஓய்வுபெற்று வரும் அலுவலர்களிடம் இருந்து அறவிடப்பட்ட விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நிதி பங்களிப்பு தொடர்பான தகவல்களை சேகரித்து தருமாறு வற்புறுத்தியது. இதுவரை ஓய்வூதியம் பெற்ற ஓய்வூதியக்காரர்கள் 20000 பேருக்கு ஓய்வூதிய நலன் கொடுப்பனவு பெற்றுக்கொள்ள தடையாக இருந்ததற்கு இச்சம்மேளனத்தில் எதிர்ப்பை வெளியிடுவதுடன் எவ்வித இடையூறும் இன்றி ஓய்வூதிய கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கும் ஓய்வூதியம் பெறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கு அழுத்தத்தை கொடுக்கும் வகையில் யோசனையை பரிந்துரைக்கின்றது.

• அதிபர் சேவையில் பதவி உயர்வு பெற, பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா , பட்ட மேற்படிப்பு , பூரணப்படுத்த வேண்டிய நிலையில் அதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளதுடன் அதற்கான கட்டணமும் நிர்ணயிக்கப்பட்ட நிலையில் உள்ளது அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டணமும் வசூலிக்கப்படுகிறது எனவே அதிபர் ஆசிரியர்களின் தொழில் தகைமையை மேம்படுத்துவதற்காக இவ்வாறான கட்ட நெறிகள் இலவசமாக வழங்க வேண்டும் என்றும் ஆசிரியர்களின் அறிவு வளர்ச்சிக்கு தேவையான வசதிகளை தற்போது நடத்தப்படும் நிகழ்நிலை பாடவிடயங்களை திறம்பட செய்ய கட்டாயப்படுத்த வேண்டும் எனவும் முன்மொழிகிறது.

• தற்போது நாட்டின் பல மாகாணங்களிலும் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் குறைந்த அளவிலேயே நிர்வாக பணிகளை நிர்வகித்து வருகின்றனர். குறிப்பாக கஷ்டப் பிரதேசங்களில் கல்வி நிர்வாகத்தின் சேவை பலவீனமானதாக மாறியுள்ளது பல முக்கிய பதவிகளுக்கு முறையற்ற விதத்தில் அரசுக்கு சார்பானவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கு தீர்வாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 400 கல்வி நிருவாக சேவை வெற்றிடங்களுக்கு நடத்தப்பட்ட பரீட்சையின் படி முறையான நேர்காணல்களை நடத்த நடத்தி வெற்றிடங்களுக்கு சரியான முறையில் ஆட்சேர்ப்பை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இம் மாநாட்டில் முன்மொழியப்படுகிறது.

• கல்வி கட்டமைப்பிலே நடைபெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்களை இலங்கை ஆசிரியர் சங்கம் மிகவும் வன்மையாக கண்டிப்பதுடன் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருப்பதாகவும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகிறது . மேலும் பாடசாலைகளில் உளவளத் துறை ஆலோசனைகள் முறையான வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் பாடசாலை மாணவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் வகையில் தண்டிக்கப்படுதலை தவிர்க்கும் முகமாக 2016 இல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை தொடர்பாக ஆசிரியர்களுக்கு போதிய விளக்கத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். "எமது 7 புத்தகம்" போல குழந்தைகளுக்கு அப்பட்டமான இன வெறியை தூண்டும் வகையிலான கற்பித்தலை நிறுத்தி சிறந்த முன்மாதிரியானபுத்தகத்தை வெளியிட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது.

• 2005/1 அமைய கல்வி அமைச்சின் சுற்றறிக்கை 2005 ஆண்டு உருவாக்கப்பட்ட பாடசாலைகளின் வகைப்பாட்டின் படி, 2016/44 உள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2016.10.17 அதி கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்காக 2500.'ஶ்ரீ கொடுப்பனவாகவும் கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்காக 1500.'ஶ்ரீவழங்கப்பட்டிருந்தது இக் கொடுப்பனவானது 11 வருடங்களுக்கு முன்பாக காணப்பட்ட சம்பள திட்டத்தின்படியே வழங்கப்பட்டிருந்தது எனினும் தற்காலத்தில் பொருந்தக்கூடிய வகையில் 3/2016 சம்பள திட்டத்திற்கு அமைய மறுசீரமைப்பு செய்யப்பட்டு அதிகரிக்கப்பட வேண்டும்.

• இந்நேரத்தில் வடமேற்கு மாகாண சபை புதிய பாடசாலை வகைப்படுத்தலுக்கேற்ப கஷ்டப் பிரதேச கொடுப்பனவுகளை நிறுத்தியுள்ளது. இதற்கு எமது எதிர்ப்பினை தெரிவிப்பதுடன் ஆசிரியர்களுக்கான சேவை செயலமர்வுகள் அழகியற் செயற்பாடுகள் விளையாட்டு ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறும். 3/2016 சம்பள திட்டத்தினை கருத்தில் கொண்டு விசேட கொடுப்பனவுகளையும் போக்குவரத்து செலவுகளை பெற்றுக் கொடுப்பதுடன் விளையாட்டு மற்றும் அழகியல் செயல்பாடுகளுக்காக ஆசிரியர்கள் சேவையாற்றும் பொழுது அதற்கான மேலதிக விசேட கொடுப்பனவுகளையும் வழங்க வேண்டும் என மாநாட்டின் ஊடாக வலியுறுத்துகின்றோம்.

• இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் மற்றும் சக வாழ்வு என்பன வெறும் வார்த்தைகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்த பட்ட நிலையில் வடக்கு கிழக்கிலே வாழும் மக்களுடைய பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வை பெற்றுக் கொடுப்பதில் காலதாமதம் மற்றும் அப்பிரதேசங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கொலைகள் கொள்ளைகள் ஆட்கடத்தல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் வடக்கின் தாய்மார்கள் தலைமையில் கடந்த 2000 நாட்களுக்கும் மேலாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்ற போதிலும் இன்று வரை எவ்வித நியாயமும் கிடைக்கவில்லை அரசினால் பலாத்காரமாக கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை

• அதற்காக மக்களால் முன்னெடுக்கப்படுகின்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தமது ஆதரவை தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளது.மேலும் 46 க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளை வருடக்கணக்காகத் தடுத்து வைத்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கமானது அந்தப் பகுதிகளில் கல்வி தொடர்பான கவனத்தை அதிகரிக்கவும், மனித வளம் மற்றும் கற்றலுக்கான பௌதீக வளங்களின் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் கோரிக்கை விடுக்கின்றது

• கடந்த பல வருடங்களாக ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படாமையால் நாட்டில் சுமார் 30,000 வரையிலான ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கிராமிய பாடசாலைகள் மற்றும் தோட்டப் பாடசாலைகளை நடத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. அரச சேவைக்கு இணைப்பு செய்வது மட்டுப்படுத்தப்பட்டுள்ள இந்நிலை கல்வியில் மேலும் மோசமான விளைவை ஏற்படுத்தும் பல வருடங்களாக நிலவி வரும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ள வேண்டும் என முன்மொழிகின்றது.

• விவசாயிகள் எதிர்நோக்கும் உர நெருக்கடிக்குத் தீர்வுகளை வழங்குதல், விவசாயப் பொருட்களை நியாயமான முறையில் சந்தைப்படுத்துவதற்கான தடைகளை நீக்குதல், கடற்றொழில் மற்றும் பெருந்தோட்டப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ள பெருந்தோட்டதுறை கல்வியில் விசேட கவனம் செலுத்துதல் ,மற்றும் தனியார் துறையின் மனித ஆற்றல் அடிப்படையிலான தொழிலாளர் சுரண்டலை நிறுத்துதல், ஓய்வூதியம் பெறுவோருக்கான ஓய்வூதிய ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்தல், தனியார் துறை ஊழியர்களின் தொழிற்சங்க உரிமையில் உள்ள தடைகளை நீக்குதல், எரிபொருள் எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் என்பதுடன் தொழிற்சங்கங்களுடன் ஒருங்கிணைந்த போராட்டங்களுக்கு தீவிரமாக பங்களிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

• இலங்கையை வங்குரோத்து நிலைக்கு தள்ளி விவசாயத்தை அழித்து நாட்டையே முற்றாக அழிவுப்பாதையில் விட்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச மக்கள் எதிர்ப்புகளை எதிர்கொள்ள முடியாமல் நாட்டை விட்டு ஓடி மீண்டும் நாட்டிற்கு வந்திருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் காணப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு ராஜபக்ச குடும்பம் செய்த ஊழல் மோசடிகளை வெளி கொணர்வதுடன் அச்சொத்துக்கள் யாவும் அரச உடமை ஆக்கப்பட வேண்டும் என அரசை வலியுறுத்துகிறது

• இலங்கை அதிபர் சேவை பதவிகளுக்கான வெற்றிடங்கள் வருடாந்தம் சேவை பிரமாண குறிப்பின்படி கணக்கிடப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும்.அதன்படி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு அந்தந்த மாகாணங்களின் கல்விக் கொள்கை மற்றும் இடமாற்றக் கொள்கைகள் அடிப்படையில் நியமனம் அமைய வேண்டும். ஆனால் தற்போது மாகாண சபைகளில் உள்ள பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமனத்தில் இம்முறை முற்றாக விலக்கப்பட்டு அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் தேவைக்கேற்ப அதிபர்கள் தன்னிச்சையாக நியமிக்கப்படுகின்றனர்.

• இது தொடர்பில் வடமத்திய மாகாணத்தின் உயர் நீதிமன்றத்தில் 2021 இலக்கத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதிபர்களை தரத்திற்கேட்ப சேவை பிரமாணங்கள் ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு நியமிக்கப்பட வேண்டும் என்றும், அதிபர் தர நியமனங்கள் மற்றும் இடமாற்ற கொள்கைகளுக்கேற்ப நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இம் மாநாட்டில் பரிந்துரைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தினால்முன்னெடுக்கப்பட்டநிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்படாமல் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசு 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைக் கூட புறக்கணித்தது. இந்நிலையில் நாட்டில் சர்வாதிகார ஆட்சியுடன் கூடிய அரசியல் சாசனத்தை உடனடியாக ஒழித்துவிட்டு நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வர இந்த மாநாடு முன்மொழிகிறது.

• அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை என்ற பெயரில் கடந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் தேவைப்பட்ட போதிலும் அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை என்ற பெயரில் கடந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் தேவைப்பட்ட போதிலும், அந்த வேலை திட்டங்கள் முழுமை பெறாமை காரணமாக பாடசாலைகளின் பிள்ளைகள், அதிபர்கள், ஆசிரியர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் கடந்த காலங்களில் கட்டப்பட்ட கட்டிடங்கள் உறுதியற்ற நிலையில் ஆட்டம் காண தொடங்கியுள்ளது .இந்த திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணமானது பெருமளவில் மோசடி செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் அரசாங்க கணக்காய்வாளர் நாயகம் ஆகியோரிடம் இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது. இந்த செயற்திட்டத்தில் ஏற்பட்டுள்ள மோசடிகள் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் எனவும் இந்த வேலை திட்டத்தை செய்து முடிப்பதற்கு வேண்டிய தலையீட்டினை மேற் கொண்டு கூடிய விரைவில் கட்டிடங்களை பாடசாலை சமூகம் பயன்படுத்தக்கூடிய வகையில் செய்து முடித்து தர வேண்டும் என அரசாங்கத்தை இம் மாநாட்டின் மூலம் வலியுறுத்துகின்றோம்

• நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியினால், வறிய மக்கள் கடும் வறுமைக்கும் தரித்திரத்திற்கும் ஆளாகியுள்ளனர்.உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட மக்கள் சுமார் இருபது இலட்சம் குடும்பங்கள் என அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது . இதனிடையே ஆசியாவிலேயே அதிக ஊட்டச்சத்து குறைபாடு உள்ள நாடாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையை "யுனிசெப்" நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசோகரியங்களுக்கும் சவால்களுக்கும் ஆளாகி வருகின்றனர் பாடசாலைக்குச் வராமல் இருப்பது, பாடசாலையில் இடை விலகிச் செல்வது, குறைந்த வயதில் திருமணம் செய்து கொள்வது, போன்ற பல சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

• எனவே இவற்றிற்கு கூடிய விரைவில் சரியான தீர்வினை பெற்றுக் கொள்வதற்காக அரசு தலையிட்டு மாணவர்களுடைய வாழ்க்கையை மேம்பாடடைய செய்ய வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகின்றது 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தினால்முன்னெடுக்கப்பட்டநிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்படாமல் பின்னர் ஆட்சிக்கு வந்த ~~அரசு19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைக் கூட புறக்கணித்தது. இந்நிலையில் நாட்டில் சர்வாதிகார ஆட்சியுடன் கூடிய அரசியல் சாசனத்தை உடனடியாக ஒழித்துவிட்டு நாட்டில்~~ ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வர இந்த மாநாடு முன்மொழிகிறது.

• தற்போது இலங்கையில் வாழ்க்கைச் செலவானது 300மு அதிகரித்துள்ளது. உழைக்கும் மக்கள் அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதன்படி உழைக்கும் மக்களின் சம்பளத்தை அதிகரிக்கவும், அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்கவும் தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் மீனவர்கள் , பெருந்தோட்டத்துறை மக்கள், என அனைவரும் வாழக்கூடியவாறு பொருட்களின் விலைகளை குறைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்

• கோத்தபாய ராஜபக்ச அரசாங்கம் தனது பொருளாதார அரசியல் செயற்பாடுகளால் நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றதுடன் நாட்டின் பொருளாதாரம், விவசாயம், மீன்பிடி சுயதொழில் உட்பட ஒட்டுமொத்த கைத்தொழில் துறையை முடக்கி மக்களை பாரிய நெருக்கடிக்குள் தள்ளியது. அவருக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டகாரர்கள் மீது அரச அடக்கு முறையை பிரயோகிக்கும் ரணில் ராஜபக்ஷஅரசாங்கத்திற்கு எமது பாரிய எதிர்ப்பை இச்சம்மேளனத்தின் ஊடாக தெரிவிப்பதுடன் போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து செயற்பாட்டாளர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் அரச பயங்கரவாதத்தை இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

- 1978 அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த காலங்களில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அடக்குமுறைக்குட்ப 1978 அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த காலங்களில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அடக்குமுறைக்குட்பட்டிருந்தனர்.

- தற்பொழுது அதே சட்டத்தினை சிங்கள மக்களுக்கு எதிராக பயன் படுத்துகின்றனர். ஒவ்வொரு அரசாங்கமும் அடக்குமுறைக் கருவியாகக் பயங்கரவாத தடைச் சட்டத்தை கையாண்டுள்ள நிலையில், நீதி கேட்டு தன்னிச்சையாக வீதிகளில் இறங்கி போராடிய பொதுமக்கள் மீது ரணில் ராஜபக்ச பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்துவதை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக அகிம்சை வழியில் போராடி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அநீதியான முறையில் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர்களான வஸந்த முதலிகே . வண. கல்வெவ சிறிதம்ம, ஹசன் ஜீவன்த ஆகியோரை விடுவிக்குமாறும் பயங்கரவாத தடை சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்வதற்கும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றது .

- தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை விலை அதிகரிப்பு காரணமாக ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் உட்பட ஒட்டுமொத்த கல்வித்துறையும் பாதிக்கப்பட்டுள்ளதுடன்; தமது சம்பளத்தில் 50வீ க்கும் அதிகமான தொகையை போக்குவரத்துக்கே செலவிட வேண்டியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு எரிபொருள் மானியங்களை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம்.

- அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்ட நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக வங்கிகள் கடனுக்கான வட்டி வீதத்தை வெகுவாக உயர்த்தியதால், வங்கிகளில் கடன் பெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள் கடும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். சம்பளத்தில் எவ்வித அதிகரிப்பும் ஏற்படாத நிலையில் அதிகரித்த வட்டி வீதத்தில் கடன் தவணையினை செலுத்த முடியாத ஆசிரியர்கள் அதிபர்களுக்கு தாம் ஏற்கனவே கடன் பெறும் பொழுது இருந்த வட்டி வீதத்திலேயே கடன் பணத்தை அறவிடுமாறும் இம் மாநாட்டின் ஊடாக வலியுறுத்துகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 65வது மாநாட்டின் கோரிக்கைகள்

- போராட்டக்காரர்கள் மீதான அடக்கு முறையை நிறுத்து !
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற மாணவர் செயற்பாட்டாளர்களைஉடனடியாக விடுதலை செய் !
- அதிபர், ஆசிரியர், மற்றும் ஆசிரியர் ஆலோசகர் சேவைகளுக்காக ஒரு தொழில்முறை கவுன்சில் நிறுவு !
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6மூ கல்விக்காக ஒதுக்கு !
- கல்வியை தனியார் மயமாக்கும் திட்டத்தை திரும்ப பெறு !
- அனைத்துக் குழந்தைகளும் சமமான கல்வியைப் பெறும் வகையில் கிராமப்புற பாடசாலைகளும் உருவாக்கு !
- சகல பாடசாலைகளுக்கும் இணைய வசதி மற்றும் கணினி வசதிகளை வழங்கு !
- போட்டி கல்விக்கு பதிலாக நல்ல குடிமகனை உருவாக்கும் கல்வி சீர்திருத்தத்தை உருவாக்கு !
- ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கற்பித்தல் சாராத பணிகளை உடனடியாக நீக்கு !
- அதிபர் மீது திணிக்கப்பட்டுள்ள தேவையற்ற சுமைகளை நீக்கு !
- அதிபர் ஆசிரியர்களது சம்பள நிலுவைத் தொகையை உடனடியாக வழங்கு !
- ஆசிரியர் சேவையில் இருந்து அதிபர் பதவிக்கு வரும்போது ஏற்படும் சம்பள குறைப்புக்கு நிரந்தர தீர்வினை வழங்கு !
- பெற்றோர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள கல்வி சுமையை நீக்கு !
- அதிபர் சேவையில் நியாயமான இடமாற்றக் கொள்கையை அமுல் படுத்து !
- வர்த்தமானி 2, 2020 மற்றும் அறிவுறுத்தல் குறியீடு 9, 2019 இன் படி, ஆசிரியர் பதவி உயர்வு சீர் செய்யப்பட்டு, சம்பள நிலுவை வழங்கு !
- மொடியூல் தொடர்பான நிரந்தரக் கொள்கையை உருவாக்கு !
- பாடசாலைகளில் உள்ள அதிபர் வெற்றிடங்களுக்கு பதில் கடமை அதிபர்களை நியமிக்கும் முடிவை உடனடியாக நிறுத்து !
- ஆயிரம் தேசிய பாடசாலைகள் மட்டுமல்ல, அனைத்து பாடசாலைகளையும் சமமாக அபிவிருத்தி செய் !
- 100க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 3000 பாடசாலைகளின் அபிவிருத்திக்கான திட்டத்தை உடனடியாகத் தயாரிக்குக !
- எரிபொருள் நெருக்கடியினால் அதிகரித்துள்ள போக்குவரத்து செலவுக்கு நிவாரணம் வழங்கு !
- மாணவர்கள் பாடசாலைக்கு வருவதற்கான போக்குவரத்துச் செலவைக் குறைக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்து !
- 1987 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய கல்வியியல் கல்லூரிகள் சட்டத்தின்படி தேசிய கல்விக்கல்லூரிகளின் ஊடாக பட்டம் படிப்பை வழங்கு !
- உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, ஒரு வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை முப்பத்தைந்தாக வரையறு !
- தேசிய கல்வி ஆணைக்குழுவை அதிகாரமிக்கதாக மாற்று !
- 2010 முதல் 2020 வரை ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய முதுநிலை தாளில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வு ஊதியத்தை வழங்க ஆவண செய் !
- அரசு ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வாழ்க்கை செலவு சுட்டெண்ணுக்கு சமனாக கொடு !
- மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பான மேன்முறையீடுகளுக்கு அரசியல் சார்பற்ற சுதந்திரமான தீர்மானத்திற்கான கட்டமைப்பை உருவாக்கு !
- ஒவ்வொரு பாடசாலைக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுப்பதுடன், பள்ளிகளின் தொலைபேசி கட்டணம், மின் கட்டணம் ஆகியவற்றை அரசே செலுத்த வழி செய் !
- பாடசாலைகளில் தண்ணீர் கட்டணம் வசூலிக்கும் முடிவை உடனடியாக ரத்து செய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு பாடசாலைக்கும் முறைப்படி அலுவலக பணியாளர்களை கடைநிலை ஊழியர்களை நியமித்து அவர்களின் பணியை முறைமைப்படுத்து !
- கல்வியின் உண்மையான நோக்கங்களை பின் தள்ளி பரீட்சை முடிவுகளை மேம்படுத்துவதாக கூறி ஆசிரியர்கள் மாணவர்கள் மீது பிரயோகிக்கும் அழுத்தங்களை உடனடியாக நிறுத்து !
- பிரபலமான பாடசாலைகளில் அதிகபட்ச இணை வகுப்புகளின் எண்ணிக்கையை 6 ஆக வரையறு !
- 13 வருட தொடர்ச்சியான கல்வி செயல்முறையை முறையாக செயல்படுத்துவதுடன் அவசியமான மனித வளங்கள் பௌதிக வளங்களை பெற்றுக் கொடு !
- பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்கு !
- சிறுநீரக நோய் உள்ள பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க ஏற்பாடு செய் !
- அரச கடமைகளுக்காக இணைந்து கொடுப்பனவையும் பிரயாணம் கொடுப்பனவையும் வழங்கு !
- பாடசாலை முகாமைத்துவ டிப்ளமோ உட்பட சகல பட்ட மேற்படிப்புகளுக்காக கட்டணம் அற விடுவதை நிறுத்தி அதனை இலவசமாக கொடுத்து அதிபர் ஆசிரியர்களுடைய ஆளுமை திறனை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை அதிகரி !
- கல்விச் சேவையில் சேவை யாப்பை மீறி வெற்றிடங்களின் நிரப்புவதை விடுத்து சரியான தகுதியானவர்களை நியமிக்க ஆவண செய் !
- பதில் கடமை அதிபர்களின் பணி நியமனங்கள் நீக்கப்பட்டு முறையான நியமனங்கள் மேற்கொள்ள வேண்டும் !
- பாடசாலைகளுக்குச் செல்லாத மற்றும் பள்ளியை விட்டு வெளியேறும் குழந்தைகளுக்கு முறையான கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்து !
- பரீட்சை பெறுபேற்றினை அதிகரித்துக் கொள்வதற்காக மாணவர்களை பாடசாலைகளிலிருந்து வெளியேற்றுவதை நிறுத்து !
- விசேட தேவையுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான கல்வி வசதிகளை விரிவுபடுத்து !
- ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் ஓய்வூதியம் ஓய்வு பெறும் நாளிலேயே வழங்க ஏற்பாடு செய் !
- ஓய்வூதியம் பெறுபவர்களின் செலுத்தப்படாத கருணைத் தொகையை செலுத்து !
- 2016ல் இருந்து ஓய்வூதியத்தை நிறுத்துவதற்கான திட்டத்தை நீக்கி ஓய்வூதிய உரிமைகளை உறுதிப்படுத்து !
- பெற்றோரிடம் இருந்து பணம் சேகரிப்பதற்குப் பதிலாக பாடசாலையை நடாத்துவதற்கான நிதியை ஆண்டுதோறும் அரச ஒதுக்கீட்டில் வழங்கு !
- பாடப்புத்தகங்கள் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி பாடத்திட்டங்கள் சரியான நேரத்தில் வழங்கு !
- மாணவர் சீருடை துணிகளை தர நிர்ணயத்துடன் திருப்பி வழங்கு !
- பாடசாலை பைகளின் எடை அதிகரிப்பிற்கு சரியான தீர்வு !
- பாடசாலை பாடத்திட்டத்தில் மதவாத இனவாத பாடப்பரப்புக்களை நீக்கு !
- ஊட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுகின்ற குழந்தைகளுக்கு உடனடியாக தீர்வு வழங்கு !
- டெங்கு மற்றும் தொற்றுநோய்களிலிருந்து பாடசாலைச் சூழலை விடுவிப்பதற்கு முறையான வேலைத்திட்டத்தை உருவாக்கு !
- பாடசாலைகளில் தளவாட பௌதீக வளங்களின்பற்றாக்குறையை நிவர்த்தி செய் !
- பாடசாலைகளில் கணினி பிரிவுகள் தொடர்ந்து பராமரிக்கப்படுவதற்கான வசதிகளை அதிகரி !
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்து !
- தகவல் அறியும் சட்டத்தை அமுல்படுத்து !
- இரண்டாம் மொழித் தேர்ச்சித் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சம்பள உயர்வினை வழங்கு !
- இரண்டாம் மொழி தேர்ச்சி பயிற்சிக்கு கட்டணம் வசூலிப்பதை நிறுத்து !
- மூடி கிடக்கும் பல்கலைக்கழகங்களை முழுமையாகவும் சரியான ஒழுங்குமுறைக்கு அமைய மீண்டும் திறக்கவும் !
- கற்பித்தல் செயல்முறைக்கு மேலதிகமாக ஆசிரியர்களிடத்திலே திணிக்கப்படுகின்ற செயற்திட்டங்கள் கணக்கறிக்கைகளை பேணுதல் மேலதிக வெளி வேலைகளில் இருந்து ஆசிரியர்களை விடுவி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்களை நியமனம் செய்யும் பொழுது கொள்கைகளை வகுத்து நியதிகளுக்கேட்ப கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல் வேண்டும் !
- பொதுப்பரீட்சைகள் கட்டணத்தை அதிகரிப்பதுடன் கொடுபடாது நிலுவையில் உள்ள தொகையினை உடனடியாக வழங்கு !
- பாடசாலைகளை வகைப்படுத்தலுக்கு உட்படுத்தும் பொழுது தற்காலத்திற்கேற்ற வகையில் கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கான கொடுப்பனவுகளை சம்பள ஏற்றத்துக்கு ஏற்ப திருத்தம் செய் !
- தேசிய கல்வியியல் கல்லூரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கீழ் கொண்டு வருவதை நிறுத்து !
- தேசியகல்வியியல் கல்லூரிகளில் பயின்ற காலத்தை சேவை காலத்துடன் சேர்த்து உரிய சம்பளத்தை வழங்கு !
- பலாலி மற்றும் மூடப்பட்ட பிற ஆசிரியர் கலாசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டு ஆசிரியர் ஆளுமையை மேம்படுத்துவதற்காக பயன்படுத்து !
- தெரிவு பாடங்களின் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதற்காக கல்வியற் கல்லூரிகளில் விசேட பாடத்திட்டங்களை ஆரம்பி !
- ஆசிரியர் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்காக தொடர்ச்சியான பயிற்சி செயல் அமர்வுகளை நடத்துதல் !
- ஆசிரியர் பற்றாக்குறையை தீர்ப்பதற்கான வேலை திட்டங்களை முன்வை !
- நாட்டில் நீதியை நிலை நாட்டு !
- ஜனநாயகத்தை உறுதிப்படுத்து !
- வடக்கு கிழக்கு மக்களின் கையகப்படுத்தப்பட்ட காணிகளை மீண்டும் அவர்களுக்கே வழங்கு !
- பாடசாலையில் தவணை பரீட்சைகள் முறைமை படுத்தப்பட வேண்டும் வினாத்தாள்கள் இலவசமாக வழங்க வேண்டும் !
- அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய் !
- 2007/20 தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை முறையாக நடைமுறைப்படுத்து !
- பெருந்தோட்ட மாணவர்கள் உயர்தரத்தில் விஞ்ஞானம் மற்றும் கணிதப் பாடங்களை கற்க வசதி செய்து கொடு !
- கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சிகளை பூரணப்படுத்திய ஆசிரியர் உதவியாளர்களுக்கு தாமதமின்றி நியமனங்களை வழங்கு !
- ஆசிரிய உதவியாளராக சேவை செய்தகாலம் பயிற்றப்படாத காலத்திற்குள் உள்ளடக்கு !
- பாடசாலைகளில் கட்டணம் வசூலிப்பதை உறுதி செய்யும் 5/. 2015 சுற்றறிக்கை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் !
- பாடசாலை கட்டமைப்பின் உள்ளே மாணவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்கள் ஏற்படும்போது அதனை வன்மையாக கண்டிப்பதுடன் அதற்கான நியாயத்தைப் பெற்றுக் கொடுத்தல் !
- ~~தமது நிர்வாக கடமைகளை மேற்கொள்ளும் பொழுது ஆசிரியர்களுக்கு ஏற்படும் பாலியல் அழுத்தங்களை இல்லாதொழித்து அதற்கான தண்டனைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் !~~
- தமிழ் பேசும் சமூகத்தினர் இடையே தமிழ் மொழியில் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான சுற்றறிக்கைகள் தகவல்களை கடிதங்களை பரிமாறுதல் !
- விசேடமாக பெண் குழந்தைகளுக்கு போதிய சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்
- தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ள பேரிடர் கடன்களுக்கு போதுமான நிதியை ஒதுக்கு !
- ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு தகுதியான கல்விச் சேவை அலுவலர்களை இணைத்துக் கொள்வதை உறுதி செய் !
- தர உள்ளீடுகளுக்கான நிதியை குறைப்பு இன்றி வழங்க வேண்டும் !
- கோவிட்-19 தொற்றுநோயினை கட்டுப்படுத்துவதற்கும் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நிதி வழங்கு !
- தேசிய கல்வி ஆணைக் குழுவை அதிகாரமிக்கதாக மாற்று !
- தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்கு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்து ஊடகவியலாளர்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைத்து வந்து பிரயோகிக்கும் அடக்கு முறையை நிறுத்து !

• பொருட்களின் விலையை குறைத்து விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டும் !

• விவசாய உற்பத்திகளுக்கு சாதாரண விலையை வழங்கு உரப்பற்றாக்குறையை நீக்குவதற்கான தீர்வினை வழங்கு குறைந்த விலையில் அவசியமான சலுகைகளை பெற்றுக் கொடு !

• தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் அடிப்படை சம்பளத்தை அதிகரி !

• கல்வி அமைச்சின் மீள் பரிசீலனை குழுவை அரசியல் சார்பற்ற விதத்தில் செயல்படுவதற்கான நடைமுறைகளை ஏற்படுத்து !

• ஆசிரியர்களுக்கு வெளிநாட்டு விடுப்பு எடுப்பதில் உள்ள தடைகள் நீக்கு !

• அரசு ஊழியர்களுக்கு சிறப்பு வெளிநாட்டு விடுப்பு பெறுவதற்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் ஆசிரியர்களின் உரிமை பறிக்கப்படுவதை நிறுத்து !

• கஷ்டப் பிரதேச பின் தங்கிய பாடசாலைகளுக்கு விடுதி வசதிகளை அதிகரி !

• முகாமைத்துவ உதவியாளர் சேவையிலிருந்து ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் முகாமைத்துவ சேவை காலத்தை ஆசிரியர் சேவையுடன் சேர்க்க !

• அக்ரஹார காப்பீட்டின் நலன்களை உடனடியாக வழங்கு அங்கத்துவ கட்டணத்தை அதிகரிப்பதை நிறுத்து !

• சுரக்ஷா காப்பீடு திட்டத்தின் நலன்களை மாணவர்களுக்கு முறையாக பெற்றுக் கொடு !

• அலுவலக நேரத்திற்கு பின்பாக ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் அனைத்து கூட்டங்களையும் சந்திப்புக்களையும் நிறுத்து !

• பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களை 1998/23 சுற்றறிக்கைகளை வெளியிட்டு முறையாக நியமனங்களைச் செய் !

• சம்பள அதிகரிப்புக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சேவை ஒப்பந்தங்களை உடனடியாக நீக்கு!

• உதவி பெறும் பாடசாலை பிரிவினை ஆசிரியர்களின் சேவை பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களது ஒழுங்காற்று நடவடிக்கைகளை தாபன கோவையின் படி செயல்படுத்து !

• அரசு ஊழியர்கள் ஓய்வு பெற்ற பிறகு அவர்களுக்கு வழங்கப்படும் அக்ரஹார காப்பீட்டு நலன்கள் உதவி பெறும் மற்றும் பிரிவெனா பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கு !

• அறநெறி, பிரிவெனா பாட ஆசிரியர்களுக்கு இலவச ரயில் "வாரண்ட்" உரிமைகள் வழங்கு !

• பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களில் பெற்றோர்களை சுதந்திரமாக இயங்க விடாது அச்சுறுத்துவதை நிறுத்து !

• வலய மட்டத்தில் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் கொண்ட கடன் வழங்கும் குழு ஒன்று உருவாக்க வேண்டும் !

• சகல மாகாணங்களுக்கும் பொதுவான சம்பள அதிகரிப்பு பத்திரத்தை அறிமுகப்படுத்து !

• வலயக் கல்வி பணிமனைகளை அனைவராலும் விரும்பக் கூடிய ஒரு இடமாக மாற்று !

• ஆரம்ப வகுப்புகளில் குழந்தைகளின் கல்வியறிவில் அதிக கவனம் செலுத்து மற்றும் அதனை மேம்படுத்துவதற்கான வேலை திட்டங்களை ஆக்கபூர்வமானதாக முன்னெடுக்கவும் !

• கல்வி கட்டமைப்பில் உளவள ஆலோசனை சேவைகளை வலுப்படுத்து !

• பெட்ரோல், எரிவாயு, மின்சாரம், தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறை !

• சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களின் அடிப்படையில் மின்சாரம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட சேவைகளின் விற்பனையை உடனடியாக நிறுத்த வேண்டும் !

• காலவரையின்றி அதிகரித்து வரும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை குறை !

• மருந்து பற்றாக்குறையை நிவர்த்தி செய் !

• நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org